-1-

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029407

1. District : மாவட்டம் தருமபுரி PS: காவல்நிலையம் ல. ஒ. த. பிரிவு Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 4/AC/2017 Date: நாள் 29.12.2017

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: -

   (iii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: -

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 21.12.2017 ம் தேதி காலை 11.00 மணி

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 26.12.2017 ம் தேதி மாலை 16.00 மணி

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 29.12.2017 ம் தேதி காலை 11.10 மணி முதல் 11.30 மணிவரை

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.12.2017 Time : நேரம் பிற்பகல் 15.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வட்டாட்சியர் அலுவலகம், காரிமங்கலம் சுமார் 22 கி.மீ வடக்கு

   Beat Number : முறைக் காவல் எண் - (b) Address : முகவரி -

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் - District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. P. பழனியப்பன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பச்சையப்பன் (லேட்)

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 49 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி தென்னாம்பட்டி கிராமம், மொளகாரன்கொட்டாய் A. சப்பாணிப்பட்டி அஞ்சல், காரிமங்கலம் வட்டம் தருமபுரி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. கார்த்திகேயன், மண்டல துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காரிமங்கலம், தருமபுரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   முன் விசாரணை மேற்கொள்ளப்பட்டதால் காலதாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........—........ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................—..........................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..............—.............. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .........................—..................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
P. Palaniyappan.

S. [signature] DSP, VAC, Dharmapuri
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 29/12/2017

15. Date & Time of despatch to the court: 29-12-2017
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30. 12. 2017 at 10 hrs

Name: பெயர் S. SUBRAMANIAN
Rank: நிலை Dy. Supdt. of Police No. எண் .........
VAC, Dharmapuri

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.4/AC/2017 பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம் 1988 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

* * * * *

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், சென்னம்பட்டி கிராமம், மருள்காரன் கொட்டாய், A.சப்பானிப்பட்டி அஞ்சல் என்ற முகவரியைச் சேர்ந்த பச்சைபப்பன் மகன் திரு.P.பழனியப்பன், வயது 49 என்பவர் இன்று 27.12.2017 ம் தேதி பகல் 15.00 மணிக்கு தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் துணை கண்காணிப்பாளர் முன்னிலையில் வாய்மொழியாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், சென்னம்பட்டி கிராமம், மருள்காரன் கொட்டாயில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். படிக்க தெரியும், சரிவர எழுத வராது. விவசாயம் மற்றும் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு 2 மகன், 1 மகள் உள்ளனர். எனது மகளுக்கு திருமணமாகிவிட்டது. எனது அப்பா பச்சையப்பன் பெயரில் அடிலம் கிராம சர்வே எண். 572/1 ல் உள்ள சுமார் 30 சென்ட் நிலத்தில் உள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு பெற, கடந்த 1992 ல் விண்ணப்பம் எழுதி என் அப்பாவிடம் கையெழுத்து பெற்று வருவாய் ஆவணங்களுடன் மாட்லாம்பட்டி EB அலுவலகத்தில் கொடுத்தேன். பிறகு அந்த விண்ணப்பம் கடந்த சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு காரிமங்கலம் EB அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. கடந்த 2017 ஜூலை மாதம் எனது அப்பா பச்சையப்பன் இறந்து விட்டார். அதன்பிறகு எனது அப்பா பெயரில் பதிவு செய்யப்பட்ட விண்ணபத்தின்பேரில் மின்இணைப்புக்கு கொடுப்பதாக காரிமங்கலம் EB ஆபிசில் இருந்து ஹெல்பர் மற்றும் ஒருவர் என்னிடம் வந்து தகவல் சொல்லி, இடத்தை பார்த்துவிட்டு போனார்கள். அப்போது அவர்களிடம் எனது பெயரில் அடிலம் கிராம சர்வே எண். 560/6 ல் உள்ள சுமார் 38 சென்ட் நிலத்தில் புதியதாக வெட்டிய கிணற்றிற்கு மேற்படி மின் இணைப்பை மாற்றிக் கொள்வதுபற்றி விவரம் கேட்டேன். அதற்கு அவர்கள் காரிமங்கலம் EB ஆபிஸ் வந்து கேட்டு தெரிந்துக் கொள்ளுமாறு சொன்னார்கள். அதன்பிறகு எனது அப்பா இறந்து சுமார் 15 நாட்கள் கழித்து காரிமங்கலம் EB ஆபிஸ் சென்று JE அவர்களை பார்த்து விவரம் கேட்டேன். அதற்கு அவர் உனது அப்பா பெயருக்கு வந்த மின்இணைப்பை உனது பெயருக்கு மாற்றிக் கொள்ளலாம் என்றும், அதற்கு புதியதாக விண்ணப்பம், வரைப்படம், கணினி பட்டா, கிணறு உரிமைச் சான்று, கிணறு செக்குபந்தி சான்று, 200 மீட்டர் தொலைவிற்கு கிணறு இல்லையென சான்று மற்றும் அடங்கல் ஆகியவற்றுடன் VAO விடம் கையொப்பம் பெற்றும், வருவாய் அலுவலர்களிடம் தடையின்மை சான்று பெற்று கொடுக்குமாறும் சொன்னார். நான் மேற்படி விண்ணப்பம் மற்றும் சான்றுகளை ஜெராக்ஸ் நகல்

எடுத்து 18.09.2017 ம் தேதி ஒரு மனு எழுதி, மேற்படி மனுவில் எனது அப்பாவுக்கு சொந்தமான அடிலம் கிராம சர்வே எண்.572/1 ல் உள்ள கிணற்றிற்கு வந்த மின் இணைப்பினை இதே கிராம சர்வே எண்.560/6 ல் உள்ள எனது கிணற்றிற்கு கூட்டுதாரர்கள் சம்மதத்துடன் மாற்றி மின்இணைப்பு வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என சான்று வழங்க கோரி காரிமங்கலம் வட்டாட்சியருக்கு கொடுத்தேன். பின்னர் எனது மனுகுறித்து பலமுறை காரிமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் சென்று கேட்டபோது, உன் மனு அலுவலகத்தில் இல்லையென்று சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார்கள். அதன்பிறகு கடந்த 21.12.2017 ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நான் காரிமங்கலம் தாலுக்கா ஆபிஸ் சென்று மண்டல துணை வட்டாட்சியர் கார்த்திகேயன் அவர்களை சந்தித்து மேற்படி எனது மனு குறித்து கேட்டபோது, உனது மனு தன்னிடம் இருப்பதாக சொன்னார். அதில் கையொப்பம் போட்டு தருமாறும் கேட்டேன். அதற்கு அவர் ரூ.2,000/- ம் லஞ்சமாக கொடுத்தால் தான் உனக்கு மின்இணைப்பு மாற்றி வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என சான்று வழங்குவதாக சொன்னார். அதற்கு நான், என்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லி வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் மீண்டும் 26.12.2017 ம் தேதி மாலை சுமார் 4.00 மணிக்கு காரிமங்கலம் தாலுக்கா ஆபிஸ் சென்று மண்டல துணை வட்டாட்சியர் திரு.கார்த்திகேயன் அவர்களை பார்த்து கேட்டபோது அவர் அதில் ரூ.500/- குறைத்து ரூ.1500/- லஞ்சமாக கொடுத்தால் தான் உனக்கு மின்இணைப்பு மாற்றி வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என சான்றில் கையெழுத்து போட்டு தருவேன் என்று முடிவாக சொல்விட்டு, பணம் ரூ.1500/- ஐ ரெடி பண்ணிக்கிட்டு எப்பா வேண்டுமானாலும் தன்னை வந்து பார்க்குமாறு சொன்னார். எனவே காரிமங்கலம் மண்டல துணை வட்டாட்சியர் கார்த்திகேயன் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1500/- ஐ அவருக்கு கொடுத்து, எனக்கு மின்இணைப்பு மாற்றி வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என சான்று வாங்க, எனக்கு விருப்பமில்லை. ஆகவே அவர் கேட்ட லஞ்ச பணம் ரூ.1500/- த்துடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால் அவர்மீது வழக்கு பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேற்படி புகாரை நான் சொல்ல சொல்ல காவல் துணை கண்காணிப்பாளர் அதை தலைமைக் காவலர் சண்முகத்திடம் சொல்லி, கம்யூட்டரில் பதிவு செய்தார். புகாரை படித்து காண்பித்தார். நான் சொன்னபடி சரியாக உள்ளது. ஒப்பம்.P.Palaniappan. Sir, The oral complaint of Thiru.P.Palaniappan, S/o.Pachaiyappan was reduced to writing by me in the office computer on 27.12.2017 at 16.00 hrs and read over to him and admitted to be correct. Further, the complaint was sent to DVAC, Chennai by FAX for seeking a

Preliminary Enquiry. Sd.xxx 27.12.2017, Deputy Supdt. of Police, V&AC, Dharmapuri.

Sir, A Preliminary Enquiry was registered against the accused officer Tr.Karthikeyan as per the orders of the DVAC vide memo in PE.455/2017/REV/DP on 27.12.2017 at 18.00 hrs. Sd.xxx 27.12.2017, Deputy Supdt.of Police, V&AC, Dharmapuri.

During the Preliminary Enquiry the informant Tr.P.Palaniappan met Tr.Karthikeyan, Zonal Deputy Tahsildar on 29.12.2017 between 11.10 hrs and 11.30 hrs at his office in Karimangalam. At that time, he reiterated his demand of Rs.1500/- for issuing no objection certificate. As the demand was confirmed, today 29.12.2017 at 19.00 hrs, a case in Dharmapuri V&AC Cr.No.4/AC/2017 u/s 7 of the Prevention of Corruption Act 1988 was registered against the accused Tr.Karthikeyan. The original F.I.R and the statement was sent to the Hon'ble court of Special Judge/Chief Judicial Magistrate, Dharmapuri and copies were sent to the officers concerned.

S. Subramanian
DSP, VAC, Dharmapuri
29/12/2017
(S. SUBRAMANIAN)

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், சென்னம்பட்டி கிராமம், மருள்காரன் கொட்டாய், A.சப்பானிப்பட்டி அஞ்சல் என்ற முகவரியைச் சேர்ந்த பச்சையப்பன் மகன் திரு.P.பழனியப்பன், வயது 49 என்பவர் இன்று 27.12.2017 ம் தேதி பகல் 15.00 மணிக்கு தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் துணை கண்காணிப்பாளர் முன்னிலையில் வாய்மொழியாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

* * * * *

நான் தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், சென்னம்பட்டி கிராமம், மருள்காரன் கொட்டாயில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். படிக்க தெரியும், சரிவர எழுத வராது. விவசாயம் மற்றும் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு 2 மகன், 1 மகள் உள்ளனர். எனது மகளுக்கு திருமணமாகிவிட்டது. எனது அப்பா பச்சையப்பன் பெயரில் அடிலம் கிராம சர்வே எண். 572/1 ல் உள்ள சுமார் 30 செண்ட் நிலத்தில் உள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு பெற, கடந்த 1992 ல் விண்ணப்பம் எழுதி என் அப்பாவிடம் கையெழுத்து பெற்று வருவாய் ஆவணங்களுடன் மாட்லாம்பட்டி EB அலுவலகத்தில் கொடுத்தேன். பிறகு அந்த விண்ணப்பம் கடந்த சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு காரிமங்கலம் EB அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. கடந்த 2017 ஜூலை மாதம் எனது அப்பா பச்சையப்பன் இறந்து விட்டார். அதன்பிறகு எனது அப்பா பெயரில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தின்பேரில் மின்இணைப்புக்கு கொடுப்பதாக காரிமங்கலம் EB ஆபிசில் இருந்து ஹெல்பர் மற்றும் ஒருவர் என்னிடம் வந்து தகவல் சொல்லி, இடத்தை பார்த்துவிட்டு போனார்கள். அப்போது அவர்களிடம் எனது பெயரில் அடிலம் கிராம சர்வே எண். 560/6 ல் உள்ள சுமார் 38 செண்ட் நிலத்தில் புதியதாக வெட்டிய கிணற்றிற்கு மேற்படி மின் இணைப்பை மாற்றிக் கொள்வதுபற்றி விவரம் கேட்டேன். அதற்கு அவர்கள் காரிமங்கலம் EB ஆபிஸ் வந்து கேட்டு தெரிந்துக் கொள்ளுமாறு சொன்னார்கள். அதன்பிறகு எனது அப்பா இறந்து சுமார் 15 நாட்கள் கழித்து காரிமங்கலம் EB ஆபிஸ் சென்று JE அவர்களை பார்த்து விவரம் கேட்டேன். அதற்கு அவர் உனது அப்பா பெயருக்கு வந்த மின்இணைப்பை உனது பெயருக்கு மாற்றிக் கொள்ளலாம் என்றும், அதற்கு புதியதாக விண்ணப்பம், வரைபடம், கணினி பட்டா, கிணறு உரிமைச் சான்று, கிணறு செக்குபந்தி சான்று, 200 மீட்டர் தொலைவிற்கு கிணறு இல்லையென சான்று மற்றும் அடங்கல் ஆகியவற்றுடன் VAO விடம் கையொப்பம் பெற்றும், வருவாய் அலுவலர்களிடம் தடையின்மை சான்று பெற்று கொடுக்குமாறும் சொன்னார். நான் மேற்படி விண்ணப்பம் மற்றும் சான்றுகளை ஜெராக்ஸ் நகல் எடுத்து 18.09.2017 ம் தேதி ஒரு மனு எழுதி, மேற்படி மனுவில் எனது அப்பாவுக்கு சொந்தமான அடிலம் கிராம சர்வே எண்.572/1 ல் உள்ள கிணற்றிற்கு வந்த மின் இணைப்பினை இதே கிராம சர்வே எண்.560/6 ல் உள்ள எனது கிணற்றிற்கு கூட்டுதாரர்கள் சம்மதத்துடன் மாற்றி மின் இணைப்பு

வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என சான்று வழங்க கோரி காரிமங்கலம் வட்டாட்சியருக்கு கொடுத்தேன். பின்னர் எனது மனுகுறித்து பலமுறை காரிமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் சென்று கேட்டபோது, உன் மனு அலுவலகத்தில் இல்லையென்று சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார்கள். அதன்பிறகு கடந்த 21.12.2017 ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நான் காரிமங்கலம் தாலுக்கா ஆபிஸ் சென்று மண்டல துணை வட்டாட்சியர் கார்த்திகேயன் அவர்களை சந்தித்து மேற்படி எனது மனு குறித்து கேட்டபோது, உனது மனு தன்னிடம் இருப்பதாக சொன்னார். அதில் கையொப்பம் போட்டு தருமாறும் கேட்டேன். அதற்கு அவர் ரூ.2,000/- ம் லஞ்சமாக கொடுத்தால் தான் உனக்கு மின்இணைப்பு மாற்றி வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என சான்று வழங்குவதாக சொன்னார். அதற்கு நான், என்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லி வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் மீண்டும் 26.12.2017 ம் தேதி மாலை சுமார் 4.00 மணிக்கு காரிமங்கலம் தாலுக்கா ஆபிஸ் சென்று மண்டல துணை வட்டாட்சியர் திரு.கார்த்திகேயன் அவர்களை பார்த்து கேட்டபோது அவர் அதில் ரூ.500/- குறைத்து ரூ.1500/- லஞ்சமாக கொடுத்தால் தான் உனக்கு மின்இணைப்பு மாற்றி வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என சான்றில் கையெழுத்து போட்டு தருவேன் என்று முடிவாக சொல்விட்டு, பணம் ரூ.1500/- ஐ ரெடி பண்ணிக்கிட்டு எப்பா வேண்டுமானாலும் தன்னை வந்து பார்க்குமாறு சொன்னார். எனவே காரிமங்கலம் மண்டல துணை வட்டாட்சியர் கார்த்திகேயன் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1500/- ஐ அவருக்கு கொடுத்து, எனக்கு மின்இணைப்பு மாற்றி வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என சான்று வாங்க, எனக்கு விருப்பமில்லை. ஆகவே அவர் கேட்ட லஞ்ச பணம் ரூ.1500/- த்துடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால் அவர்மீது வழக்கு பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேற்படி புகாரை நான் சொல்ல சொல்ல காவல் துணை கண்காணிப்பாளர் அதை தலைமைக் காவலர் சண்முகத்திடம் சொல்லி, கம்யூட்டரில் பதிவு செய்தார். புகாரை படித்து காண்பித்தார். நான் சொன்னபடி சரியாக உள்ளது.

P. Palaniyappan
27-12-2017

Sir, Oral Complaint of Thiru P. Palaniyappan s/o Pachaiyappa was reduced to writing by me in the office Computer on 27.12.2017 at 1600 hrs and read over to him and admitted to be Correct. Further, the Complaint was sent to DVAC, Chennai, by Fax for Seeking a Prelimin enquiry.

[signature]
DSP VAC Dharmapuri
27.12.2017

Sir, A Preliminary Enquiry was registered against the accused officer Tr. Karthikeyan as per the orders of the DVAC vide memo in - PE 455/2017/REV/DP on 27.12.2017 at 1800hrs.

S. [signature]
DSP, VAC, Dharmapuri
27.12.2017

During the Preliminary Enquiry the informant Tr. P. Palaniyappan met Tr. Karthikeyan, Zonal Deputy Tahsildar on 29.12.2017 between 11.00hrs and 11.30h at his office in Karimangalam. At that time, he reiterated his demand of Rs 1500/- for issuing no objection Certificate As the demand was Confirmed, today 29.12.2017 at 1900hrs, a case in Dharmapuri V & AC CrNo 4/AC /2017 u/s 7 of the prevention of Corruption Act 1988 was registered against the accused Tr. Karthikeyan. The Original FIR and the statement was sent to the Hon'ble court of special judge / Chief judicial Magistrate, Dharmapuri and Copies were sent to the officers Concerned.

S. [signature] 29.12.2017
DSP, VAC, Dharmapuri